00277

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**சமூக கற்கைகள் துறைகள்**

**விஞ்ஞானமாணிப் பட்டப்படிப்பு – மட்டம் III**

**இறுதிப் பரீட்சை 2024/2025 (பருவம் II)**

**DSU3298 - இலங்கை சமூகம் -அறிமுகம்**

**காலம்: இரண்டு மணித்தியாலங்கள் (02 மணித்தியாலங்கள்)**

**திகதி: 25.11.2024** **நேரம்: மு.ப. 9.30 – மு.ப 11.30**

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக. ஒவ்வொரு வினாவும் 25 புள்ளிகளை கொண்டது.**

1.காலனித்துவம் இலங்கையின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகளை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சமகால இலங்கையில் தொடர்ந்தும் தாக்கத்தை ஏற்படுத்தும் காலனித்துவ மரபுரிமைகளை விரிவாக எடுத்துரைத்து விவாதிக்குக.

2. இலங்கைத் தேசிய அடையாளத்தில் இனப் பல்வகைமையின் தாக்கத்தை விபரித்து வரலாற்று மற்றும் அரசியல் காரணிகள் எவ்வாறு இலங்கையின் இன உறவுகளை வடிவமைக்கின்றன என்பதை விவாதிக்குக.

3. நவீன இலங்கைச் சமூகத்தில் சாதியின் வகிபாகம் என்ன? சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் தற்போதைய சமூக-பொருளாதார சூழலில் குறைந்துள்ளதா அல்லது மாறியுள்ளதா? உங்கள் விடையை உதாரணங்களுடன் ஆதரிக்குக.

4. “இலங்கையில் ஒற்றுமை மற்றும் பிரிவினையை வடிவமைப்பதில் மதம் முக்கிய பங்கு வகிக்கிறது”. இக்கூற்றை இலங்கையில் சமூக நல்லிணக்கம் மற்றும் மோதல்களில் முக்கிய மதங்களின் செல்வாக்கு பற்றிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு விவாதிக்குக.

5. இலங்கை சமூகத்தில் குடும்பம் மற்றும் உறவுமுறையின் கட்டமைப்பு மற்றும் பங்கை விவரிக்கவும். அவை எவ்வாறு உலகமயமாதல் மற்றும் நகரமயமாதலின் காரணமாக மாறியுள்ளன?

6. சமூக இயக்கத்தை ஊக்குவிப்பதில் இலங்கையின் கல்வி முறைமையின் செயல்திறனை வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் இன்றைய சவால்களை கருத்தில் கொண்டு விவாதிக்குக.



125

7. "இலங்கையின் அபிவிருத்தி செயற்பாட்டில் கலாசார மரபுரிமை என்பது இருமுனைகள் கொண்ட வாள் போன்றது". இக்கூற்றை இலங்கை குறித்த சமகாலத்தை வடிவமைப்பதில் பாரம்பரிய மதிப்புகள் மற்றும் நடைமுறைகளின் பங்கு பற்றிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு விவாதிக்குக.

8. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக சமத்துவமின்மைக்கும் இடையிலான உறவை கலந்துரையாடுக. பொருளாதார வளர்ச்சி சிறந்த சமூக சமத்துவமாக மாறியுள்ளனவா?

9. ஏதேனும் **நான்கிற்கு (04)** சிறுகுறிப்பு எழுதுக.

அ. 1956 சிங்களம் மட்டுமான சட்டம்

ஆ. இலங்கையின் அரச சார்பற்ற அமைப்புகளின் வகிபாகம்

இ. கூட்டுப்பொறுப்பு

ஈ. இலங்கை சமூகத்தில் பெண்களின் வகிபாகம்

உ. இலங்கையில் பௌத்த மதமும் அரசியல் அதிகாரமும்

ஊ. இலங்கை புலம்பெயர்ந்தோரும் உள்நாட்டு அரசியலில் அதன் செல்வாக்கும்

*********_பதிப்புரிமையுடையது_*********



157